**தலைப்பு 244 – வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 244 – வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 ஏப்ரல் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 செயலாற்றல்

### 2.1.1 கடமைகளை நிறைவேற்றுவதின் செயல்முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பொருள் வியாபாரம், சேவை வியாபாரம் முதலீடுகள் மற்றும் சுங்க ஒத்துழைப்புக்கள் போன்ற ஏனைய வியாபாரப் பிரிவுகளையும் உடள்ளக்கும் வகையில் பிரேரிக்கப்பட்ட பல்தரப்பு மற்றும் இருதரப்பு 4 வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொள்வதானது உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடல் மட்டத்தில் காணப்பட்ட போதிலும் 2015 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை 07 ஆண்டுகள் கடந்திருந்தும் உரிய உடன்படிக்கைகளை மேற்கொள்ளல் பூர்த்தியடைந்திருக்கவில்லை . | உத்தேசிக்கப்பட்ட பிம்ஸ்டெக் (BIMSTEC) உடன்படிக்கையானது இலங்கையையும் சேர்த்து 7 நாடுகளை உள்ளடக்கும் வகையிலான பல்தரப்பு உடன்படிக்கையாகும்.<br><br>இந்த திணைக்களத்திற்கு தொடர்புபடுவது வணிகத் திணைக்களத்துடன் இணைந்து வர்த்தக மற்றும் முதலீட்டுப் பிரிவிற்குரிய உடன்படிக்கைகளின் அங்கத்துவ நாடுகளின் இணக்கப்பாட்டுடன் சுங்கத் தீர்வைகளை விலக்கிக்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டங்களை (Trade Liberalization Programme) திட்டமிட்டு அமுல்ப்படுத்துவதாகும். | தாமதமின்றி உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அதற்கிணங்க இலங்கை தரப்பினர்கள் தீர்வை வரி கொள்கையை விலக்கிக் கொள்ளும் நடைமுறை தொடர்பான அனைத்து செயற்பாடுகளும் இத்திணைக்களத்தினால் முடிவுறத்தப்பட்டு வணிகத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் முடிவடைந்திருந்தும் இது ஏழு நாடுகளுக்கிடையே பல துறைகளை உள்ளடக்கும் வகையில் உத்தேசிக்கப்பட்ட பல்துறை உடன்படிக்கை என்பதனால் அனைத்து தரப்பினர்களின் பங்குபற்றல் மற்றும் இணக்கப்பாடு இல்லாமல் இந்த உடன்படிக்கையை ஒரு தரப்பாக முடிவுறுத்தும் இயலுமை இல்லை.

பொருளாதார ஒத்துழைபுக்கான (ETCA) உடன்படிக்கையானது 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் முதலாவது கலந்துரையாடலானது 2016 ஆகஸ்ட் மாதம் நடாத்தப்பட்டது. தற்பொழுது 11 கலந்துரையாடல்கள் இந்த உடன்படிக்கை சம்பந்தமாக நடாத்தப்பட்டுள்ளன.

உத்தேச சீன இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையானது (ஊளுகுவுயு) சீனாவிற்கும் இலங்னைக்கும் இடையேயான இருதரப்பு உடன்படிக்கையாக இருப்பதனால் இருதரப்பினர்களினதும் பங்குபற்றல் மற்றும் இணக்கப்பாடு இல்லாமல் இந்த உடன்படிக்கையை ஒரு தரப்பாக முடிவுறுத்தும் இயலுமை இல்லை.

| | | |
|---|---|---|
| | உத்தேச இலங்கை தாய்லாந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கலந்துரையாடல் ஆரம்பக்கட்டத்தில் காணப்படுவதுடன் இரு தரப்பினர்களும் இணக்கத்திற்கு வந்ததன் பின்னர் மாத்திரம் உடன்படிக்கை மேற்கொள்ளப்படலாம். | |

**(ஆ) செயலாற்றல் குறிகாட்டி**

| | | |
|---|---|---|
| வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களத்தினால் ஏற்றுமதிக்காக தீர்வை வரி வழிகாட்டல்களை வழங்குவதன் கீழ் உள்ளக நடவடிக்கைகளின் போது பயன்படுத்துவதற்காக தயாரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட தரவுக் கோவை (Data Sheet) தொடர்பான நடவடிக்கை மீளாய்வாண்டின் இறுதிவரை முடிவடைந்திருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது இந்நடவடிக்கை நசம்பந்தமான தொடக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2023 ஆம் ஆண்டின் போது செயறபாடுகளை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பௌதீக செல்முன்னேற்றம்**

| | | |
|---|---|---|
| மீளபாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிட்ட 10 செயற்பாடுகள்/ கொள்கைகளுடன் தொடர்புபட்ட 18 வெளயீடுகள் மற்றும் குறிகாட்டிகள் சம்பந்தமாக திட்டமிட்டவாறு பௌதீக செயல்முன்னேற்றம் அடைந்துகொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | உங்களால் அவதானிக்கப்பட்ட சில செயற்பாடுகள்/ கொள்கைகள் output / indicator சம்பந்தமான பௌதீக செயல்முன்னேற்றம் மீளாய்வாண்டில் காட்டப்படாத சில சந்தர்ப்பங்கள் உள்ளன என்பதனை இணங்கிக் கொள்கிறேன்.<br><br>சில ஆண்டுகளில் காட்டப்பட்டுள்ள output / indicator முதலியன 100 சதவீதம் எதிர்பார்த்தவாறு நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்கள் | திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | காணப்படுகின்றன என தயவாக தெரிவிக்கிறேன். | |

3. **மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரித்த பதவிகள் 64 ஆக இருந்ததுடன் அதில் 08 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. அந்த வெற்றிடமான பதவிகளுக்கிடையே மூன்றாம் மட்டத்திலுள்ள 02 பதவிகளும் இரண்டாம் மட்டத்திலுள்ள 03 பதவிகளும் மற்றும் ஆரம்ப மட்டத்திலுள்ள 03 பதவிகளும் இருந்தன. | ஒருங்கிணைந்த சேவை தொடர்பாக 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட வெற்றிடங்கள் சம்பந்தமாக அரசாங்க நிருவாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படாமையின் அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்புதல் தாமதமடைந்துள்ளது என தயவாக தெரிவிக்கிறேன். | முறைப்படியாக நடவடிக்கை எடுத்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரித்த பதவியணியில் திருத்தங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும. |